# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் ‘A+’ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**

**முனைவர் சு.சீனிவாசராகவன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ)

தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444
மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
வலைதளம் : **www.bdu.ac.in**


---

**ந.க. எண்: தே.பி./முதுநிலை/செய்முறைத்தேர்வுகள் /ஏப்ரல் 2024/ நாள்:19.02.2024**

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** ஏப்ரல் 2024 – முதுநிலை பட்ட மேற்படிப்பு – பட்டயப்படிப்பு – செய்முறைத்தேர்வு – களப்பணி, திட்டக்கட்டுரை, வாய்மொழித் தேர்வு – நாள் அறிவிப்பு – தொடர்பாக.

**பார்வை:** துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 16.02.2024

---------

பார்வையில் கண்டுள்ளபடி, ஏப்ரல்-2024ல் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்ட மற்றும் பட்டய படிப்பிற்கான செய்முறைத் தேர்வு, களப்பணி, திட்டக்கட்டுரை, மற்றும் வாய்மொழித் தேர்வுகளுக்கான கால அட்டவணை கீழ் கண்டுள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் - செய்முறைத்தேர்வு, களப்பணி, திட்டக்கட்டுரை மற்றும் வாய்மொழித் தேர்வு**
**(M.A., M.Sc., M.Com., M.S.W., M.B.A. & M.C.A. & All P.G. Diploma Courses Practicals, Field work, Project work, Viva.)**

| விபரம் | செய்முறைத்தேர்வு, களப்பணி, திட்டக்கட்டுரை, மற்றும் வாய்மொழித் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் விபரம் |
|---|---|
| அனைத்து முதுநிலைப் பட்டப்படிப்புகள் (M.A., M.Sc., M.Com., M.S.W) பட்டயப்படிப்புகள் (P.G. Diploma courses) | 04.03.2024 – முதல் - 20.03.2024 - வரை<br>திங்கள் கிழமை - புதன்கிழமை |
| M.B.A., M.C.A., பட்டப்படிப்புகள் | 04.03.2024 – முதல் - 20.03.2024 - வரை<br>திங்கள் கிழமை - புதன்கிழமை |

1. செய்முறைத் தேர்விற்கான கால அட்டவணையை தயார் செய்து முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கு (All P.G. Courses ., All P.G. Diploma Courses , M.B.A., & M.C.A., பாடப்பிரிவுகளுக்கு24.02.2024க்குள் பாட வாரியாக இரண்டு நகல்களை தனித்தனியே இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகள். திட்டக்கட்டுரை மற்றும் களப்பணித் தேர்வுகளை நடத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

2. மேலும். தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் அகமதிப்பெண்கள். செய்முறைததேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித்தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவற்றை தேர்வு முடிந்த மறுதினமே அகப்புறத்தேர்வாளர்களின் கையொப்பம். மற்றும் முதல்வரின் மேலொப்பத்துடன் தேர்வு நெறியாளருக்கு அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கவும் மேலும், இணையதளத்தின் வாயிலாக (www.bdu.ac.in/exam-esubmit) தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. மேலே கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தேதி வாரியாக மட்டுமே செய்முறை, திட்டக்கட்டுரை மற்றும் களப்பணி தேர்வுகள் நடத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்னர் நடத்த அனுமதி கிடையாது எனக் கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

4. பல்கலைக்கழக ஒருமை/இருமைப் (ODD/EVEN Semester) பருவச் செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் அந்தந்தப் பருவத்தேர்வில் மட்டும்தான் செய்முறைத் தேர்வுகளைச் (Practical Examinations) செய்ய இயலும், இதனை தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவர்/மாணவிகளுக்கும் தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. எழுத்துத் தேர்விற்கான அக மதிப்பெண்களை உரிய காலத்திற்குள் exams1.bdu.ac.in –ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

6. பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாகப் பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. தேர்வு நெறியாளரின் ஆணையின்படி, ஏப்ரல்-2024 செய்முறைத் தேர்விற்கு நியமணம் செய்யப்பட்ட புறத்தேர்வாளர் தேர்வுப்பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள், மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் / தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத்தேர்வாரள்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணாக்கர்களுக்கு தேர்வு முடிவுகளை சரியாகவும் / விரைவாகவும் வழங்கிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் கடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

தங்கள் உண்மையுள்ள

19/2/24

தேர்வு நெறியாளர் (பொ)

<u>நகல்.:</u>

1. இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைகழகம்
2. மந்தனப்பிரிவு - I
3. மந்தனப்பிரிவு - II
4. கணக்குப்பரிவு -